FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313237

1. District : மாவட்டம் Chennai Alandhur | PS: காவல்நிலையம் V & AC | Year: ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் 10/AC/2026 | Date: நாள் 21.10.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 (Amended 2018) | Sections பிரிவுகள்: U/s 7 of PC Act 1988 (Amended 2018)

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 13.10.2026 | Date to : நாள் வரை 20.10.2026

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.10.2026 | Time : நேரம் 08.30 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 1.5 KMS North East

Beat Number : முறைக் காவல் எண் – | (b) Address : முகவரி –

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் – | District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. அசிகுமார் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோவிந்தசாமி

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 39 yrs | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் K.R. Properties & Estate Pvt Ltd., Eletrical Dept. Manager | (g) Address : முகவரி எண். 37, கெண்ணடி ஸ்கெயர் மெயின் ரோடு திரு. வி. க நகர், பெரம்பூர் சென்னை - 600011.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. ஜான் டேவிட்சன், FOREMAN, TNEB, கிண்டி, சென்னை - 32
2. Tr. சத்ய நாராயணன், AE, TNEB, கிண்டி, சென்னை - 32

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet is enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed P.I. Josline Mary / Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

21/10/26

21.10.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..... P.I. JOSLINE MARY
Rank: நிலை ..... No. எண் ..... Inspector of Police
VE&AC, Chennai -16

INSPECTOR OF POLICE,
Vigilance and Anti-Corruption
Chennai City - I
Alandur, Chennai - 16.

(Contents of the F.I.R. in CC-1, V & AC, Cr.No.10/AC/2026/CC-I, U/s. 7 of Prevention of Corruption (Amendment), Act –2018, continues.....)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>: 21.10.2026 -ஆம் தேதி காலை 08.00 மணியளவில், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-I -ன் காவல் ஆய்வாளர் P.I.ஜோஸ்லீன் மேரி ஆகிய நான் மேற்சொன்ன அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது சென்னை -600 011, பெரம்பூர், திரு.வி.க நகர், கென்னடி ஸ்கெயர் மெயின் ரோடு, எண்.37 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. G.சசிகுமார், த/பெ. கோவிந்தசாமி என்பவர் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் வந்து, சென்னை நகரப்பிரிவு -1 காவல் ஆய்வாளர் ஆகிய என்னிடம் தமிழில் தட்டச்சு செய்து கொடுத்த எழுத்து மூலமான புகாரை கொடுத்தார். நான் அந்த புகாரை பெற்று, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் புகார் மனு தொடர்பாக மறைமுகமாக ரகசிய விசாரணை மேற்கொண்டேன். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சென்னை, கிண்டி மின்சார வாரியத்தில் பணிபுரியும் அலுவலர்களான திரு.ஜான் டே பிரிட்டோ, போர்மேன், திரு.சத்திய நாரயணன், உதவி பொறியாளர் மற்றும் புகார்தாரர் திரு. சசிகுமார் ஆகியோர்களின் முன்நடத்தையும், புகார்மனுவின் உண்மை தன்மையையும் ரகசிய விசாரணை மேற்கொண்டேன். எனது ரகசிய விசாரணையில் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டிற்கு மூகாந்திரம் இருப்பதால் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் அனுமதி பெறப்பட்டு, புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப ஊழல் தடுப்பு சட்டம் 1988 திருத்தப்பட்ட ஊழல் தடுப்பு திருத்தம் சட்டம் 2018யின்படி சட்டப்பிரிவு 7 ன்படி இன்று 21.10.2026 -ந்தேதி காலை 08.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர்:- G.சசிகுமார், வயது 39/2026, த/பெ. கோவிந்தசாமி, எண் 37, கென்னடி ஸ்கெயர் மெயின் ரோடு, திரு.வி.க நகர், பெரம்பூர், சென்னை -600 011, பெறுனர்:- உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, ஆலந்தூர், சென்னை-16. அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் சென்னை வடபழனி, கவனர் தெரு, பழைய எண் 37, புதிய எண் 4 என்ற முகவரியில் சுமார் ஆறு வருடங்களாக இயங்கி வரும் KR Properties &

Estates Private Limited என்ற நிறுவனத்தில் Electrical Department -ல் மேலாளராக கடந்த ஆறு வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் நிறுவனத்தின் இயக்குநர்கள் திரு. அனந்தலிங்கம் மற்றும் திரு. சுந்தரலிங்கம் ஆகியோர் ஆவர். எங்கள் இயக்குநர்கள் இருவரும் சிங்கப்பூரில் Business செய்து வருகின்றனர். மேலும் எங்கள் நிறுவனத்தின் பணியானது நாங்கள் சொந்தமாக இடத்தை வாங்கி அதில் நிறுவனங்களை கட்டி அதில் Interior works -களை எங்கள் நிறுவனமே Contract அடிப்படையில் ஊழியர்களை வைத்து Plumbing, Electrical மற்றும் Interior வேலைகளை நாங்களே செய்து முடித்து கொள்வோம். மேலும் எங்கள் Director -கள் இருவரும் சிங்கப்பூரில் வசித்து வருவதால் சென்னையில் எங்களது நிறுவனத்தின் நிர்வாக சம்மந்தப்பட்ட நடவடிக்கைகளை எங்களது நிறுவனத்தில் Deputy General Manager பணிபுரியும் திரு.K.ராஜேஷ் அவர்கள் கண்காணித்து வருவதற்கு மேற்படி எங்களது Director, திரு.K.ராஜேஷ் அவர்களுக்கு authorization வழங்கியுள்ளார். மேலும் சென்னை கிண்டி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், பேஸ் -3, எண் A-24 என்ற முகவரியில் Stilt உடன் கூடிய நான்கு தளங்களை கொண்டு இயங்கும் Sai Pride என்ற எங்கள் நிறுவனத்தின் Commercial building வாடகைக்காக விடப்பட்டுள்ளது. அந்த பில்டிங்கில் IT, Travels மற்றும் பல தனியார் நிறுவனங்கள் என பல்வேறு வகையான நிறுவனங்கள் இயங்கி வருகிறது. இந்த கட்டடத்தில் ஐந்து மின் இணைப்புகள் உள்ளன. வழக்கம் போல் எங்கள் நிறுவனத்தை மின்சார வாரியத்திலிருந்து Reading எடுக்க 21.09.2026 வந்தார்கள். பின்னர் நாங்கள் வழக்கம் போல் Online-லில் 12.10.2026 -ம் தேதியன்று ஐந்து இணைப்புகளுக்கும் EB Bill கட்டினோம். ஆனால் அந்த ஐந்து இணைப்புகளில் 09211017510 மற்றும் 09211017486 ஆகிய இரண்டு இணைப்புகள் மட்டும் Payment TNEB Account -ற்கு Credit ஆகாமல் இருந்து payment pending ஆனதால் TNEB அலுவலகத்தில் இருந்து வந்து மேற்கண்ட இரண்டு இணைப்புகளின் FUSE carrier -ஐ மட்டும் 13.10.2026 -ம் தேதியன்று கழற்றி கொண்டு சென்று விட்டனர். பின்னர் நான் எங்கள் நிறுவன Deputy General Manager அவர்களுக்கு மேற்படி Fuse Carrier கழற்றி கொண்டு போன விவரத்தை தெரிவித்தேன். அதற்கு சரி நீங்கள் guindy EB office சென்று விசாரித்துவிட்டு

வருமாறு என்னை அனுப்பி வைத்தார். நானும் அதன் பேரில் கடந்த 13.10.2026 -ம் தேதியான அன்றைய தினமே, கிண்டி மின் அலுவலகத்திற்கு சென்ற போது, அங்கு அலுவலகத்தில் Foreman திரு. ஜான் டே பிரிட்டோ இருந்தார். அப்போது அவரிடம் சென்று Sai Pride Commercial Building -ன் இரண்டு இணைப்புகளின் Fuse carrier கழற்றி கொண்டு சென்றதை பற்றி விசாரித்த போது, அதற்கு போர்மேன், உங்கள் payment TNEB கணக்கிற்கு update ஆகவில்லை. அதனால் நீங்கள் மீண்டும் ஆன்லைன் EB Bill Pay பண்ணிவிடுங்கள். நீங்கள் ஏற்கனவே Pay பண்ணிய பணம் உங்கள் கணக்கிற்கு refund ஆகும், இல்லையென்றால் TNEB Advance Payment -ல் இருக்கும் என்று கூறிவிட்டு, போர்மேன் உங்கள் EB Reading -ஐ Check செய்ததில், உங்கள் Sai Pride Commercial Building -க்கான usage KW அதிகமாக உள்ளது. அதனால் நீங்கள் 09211017510 மற்றும் 09211017486 ஆகிய இரண்டு மீட்டர்களையும் 5 KW -யிலிருந்து 49 KW ஆகவும், 38 KW-யிலிருந்து 49 KW ஆகவும் மாற்ற வேண்டும். அது மட்டுமில்லாமல் KW கூடுதலாகும் போது, Transformers Rating Increase ஆவதால், நீங்கள் Transformer-யையும் மாற்ற வேண்டும் என்றும், மேற்படி வேலைகளுக்கு 5 KW -லிருந்து 49 KW ஆகவும், 38 KW -லிருந்து 49 KW ஆக மாற்றுவதற்கு நீங்கள் ஒரு மீட்டருக்கு ரூ.2,00,000/- வீதம் இரண்டு மீட்டர்களுக்கு ரூ. 4,00,000/-மும், Transformer-ஐ change செய்வதற்கு ரூ.5,00,000/-மும் தனியாக எங்களுக்கு கவனிக்க வேண்டும். இது எனக்கு மட்டுமில்லை AE திரு. சத்திய நாரயணன் அவர்களுக்கும் நான் தர வேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கும் போதே, அலுவலகத்தினுள் AE திரு. சத்திய நாரயணன் அவர்களும் வந்துவிட்டார். பின்னர் Foreman-னிடம் என்னை யார் என்று கேட்ட போது, இவர் Sai Pride Commercial Building Meter விஷயமாக வந்துள்ளார் என்று கூறியவுடன், AE திரு. சத்திய நாரயணன் அவர்கள் என்னிடம் Foreman ஏற்கனவே உங்களிடம் கூறியிருப்பார் 5 KW -யிலிருந்து 49 KW ஆகவும், 38 KW -யிலிருந்து மாற்றுவதற்கு நீங்கள் ஒரு மீட்டருக்கு ரூ.2,00,000/- வீதம் இரண்டு மீட்டர்களுக்கு ரூ. 4,00,000/-மும், Transformer-ஐ change செய்வதற்கு ரூ.5,00,000/- மும் எங்களுக்கு தனியாக கவனிக்க வேண்டும். இல்லையென்றால் நான் Fuse Carrier -ஐ கழற்றி விட சொல்லி விடுவேன் என்று கறாராக பேசிவிட்டு சென்று

விட்டார். பின்னர் நான் எங்கள் நிறுவன Deputy general manager திரு.ராஜேஷ் அவர்களிடம் கலந்தாலோசித்து சொல்கிறேன் என்று கூறிவிட்டு அலுவலகத்தைவிட்டு வந்து விட்டேன். பின்னர் எங்கள் Deputy General manager அவர்களிடம் கிண்டி மின் அலுவலகத்தில் நடந்த அனைத்து நிகழ்வுகளை பற்றி கூறியதற்கு அவர் சிங்கப்பூரிலுள்ள எங்கள் நிறுவன இயக்குநர் திரு. அனந்தலிங்கம் அவர்களிடம் கேட்டு சொல்கிறேன் என்று கூறினார். பின்னர் எங்கள் இயக்குநரிடம் கேட்டதற்கு, அவர் முதலில் மனுவாக எழுதி கொண்டு போய் கிண்டி மின் அலுவலகத்தில் கொடுத்துவிட்டு, தொகை அதிகமாக உள்ளது குறைத்து கொள்ளும்படி திரு. சசிகுமார் அவர்களை கேட்க சொல்லுங்கள் என்று கூறியதாக, எங்கள் Deputy General Manager என்னிடம் கூறினார். அதன் பேரில் நானும் மறுநாள் 14.10.2026 -ம் தேதியன்று கிண்டி மின் அலுவலகம் சென்று போர்மேன் அவர்களை சந்தித்து இரண்டு மீட்டர்களுக்கான KW -க்களை கூடுதலாக பெறுவது வேண்டி மனுக்கள் கொண்டு வந்துள்ளேன் என்று கூறிய போது போர்மேன் மனுவெல்லாம் வாங்க முடியாது நீங்கள் முதலில் Transform மாற்றுவதற்கு ரூ.5,00,000/- எனக்கும், உதவி பொறியாளருக்கும் தனியாக கவனித்துவிட்டு, Transform -மை மாற்றும் வழியை பாருங்கள் Transform மாற்றிய பின்னர் மீட்டர்களையெல்லாம் மாற்றி கொள்ளலாம் என்று கறாராக கூறினார். அதற்கு நான் சார் KW -க்களை கூடுதலாக பெற ஒரு மீட்டருக்கு ரூ.2,00,000/- வீதம் இரண்டு மீட்டர்களுக்கு மொத்தம் 4,00,000/-மும், Transform மாற்றுவதற்கு ரூ.5,00,000/-மும் அதிகமாக உள்ளது, கொஞ்சம் குறைத்து கொள்ளுமாறு எங்கள் ஓனர் உங்களிடம் கேட்க சொன்னார் என்று கூறினேன் அதற்கு அதெல்லாம் சரி வராது நீங்கள் கொடுக்க தாமதப்படுத்தினால் நான் மீண்டும் வந்து உங்கள் வணிக வளாக Fuse Carrier -ஐ கழற்றி கொண்டு போய்விடுவேன் என்று போர்மேன் கூறினார். பின்னர் மீண்டும் 14.10.2026 -ம் தேதி மாலை போர்மேன் அவர்களின் செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு ரூ.5,00,000/-த்தை குறைத்து கொள்ளும்படி கேட்டதற்கு, அதெல்லாம் முடியாது நாளை காலை ரூ.5,00,000/-பணத்தை எடுத்து கொண்டு வரும்படியும் இல்லையென்றால் நீங்கள் வணிக வளாகம் நடத்த முடியாது என்று கறாராக கூறி செல்போன் இணைப்பை துண்டித்துவிட்டார். பின்னர் மீண்டும் Deputy general Manager

திரு.ராஜேஷ் அவர்கள், எங்கள் இயக்குநரை தொடர்பு கொண்டு ரூ.5,00,000/-த்தை குறைத்து கொள்ளவில்லை என்ற விவரத்தை நான் கூறியதற்கு, அவர் என்னை மீண்டும் போர்மேன் அவர்களை தொடர்பு கொண்டு ஆன்லைனில் அப்ளை பண்ண கேட்க சொன்னார். அதன் பேரில் நானும் 15.10.2026-ம் தேதியன்று Foreman அவர்களது செல்போன் எண்ணான 9445811335 என்ற எண்ணிற்கு நான் தொடர்பு கொண்டு சார் எங்கள் ஓனர் என்னை ஆன்லைனில் அப்ளை பண்ண சொல்றார். நான் அப்ளை பண்ணிவிடுகிறேன் என்று கூறினேன். அதற்கு நான் சொல்லும் போது நீ ஆன்லைன் அப்ளை பண்ணு, இப்ப மீறி பண்ண நான் கட்டுமானம் சரியில்லையென Notice கொடுத்து, Disconnect பண்ணிடுவேன், சும்மா ஏடா கூடா பண்ணாதீங்க என்று மிரட்டினார். பின்னர் நான் Foreman கூறியதை எங்கள் Deputy General Manager அவர்களிடம் கூறியதற்கு நீங்கள் ஆன்லைனில் அப்ளை பண்ணிடுங்க, பார்த்துக்கலாம். என்று சொன்னார். உடனே நான் 15.10.2026 -ம் தேதியன்று ஆன்லைனில் எங்கள் Sai Pride Commercial Building மீட்டர் எண்ணான 09211017510 -ற்கு 5KW -லிருந்து 49 KW -ற்கு 44 KW add பண்ணுவதற்கு தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் லிமிடெட் (இணையதள மின் கட்டண முறை) Website-ல் அப்ளை செய்தேன். அதற்கான fees -ஆக ரூ.1,41,695/- னை செலுத்தினேன். மற்றொரு எண்ணான 09211017486 -ற்கு 38 KW -யிலிருந்து 49 KW -ற்கு 11 KW add பண்ணுவதற்கு தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் லிமிடெட் (இணையதள மின் கட்டண முறை) Website-ல் அப்ளை செய்ய முயற்சித்த போது, Disconnect ஆகி, Application Process பண்ண முடியவில்லை. மேற்படி விவரங்களை எங்கள் Deputy General manager -ரிடம் கூறினேன். பின்னர் மீண்டும் 16.10.2026 -ந்தேதியன்று காலை போர்மேன் திரு.ஜான் டே பிரிட்டோ எனது செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு உன்னை யார் ஆன்லைனில் அப்ளை பண்ண சொன்ன, நீயே உன் கம்பெனி Fuse Carrier -ஐ கழற்றி கொண்டு வந்திடு, நான் வந்து Full connection -ஐயும் Cut பண்ணிடுவேன், இல்லைன ஆன்லைனில் அப்ளை பண்ணத cancel பண்ணு என்று மிரட்டி, நீ முதல்ல ஆபீஸிற்கு வா என்று கோபமாக பேசி செல்போனை துண்டித்துவிட்டார். மேலும் அவரும் மேற்குறிப்பிட்ட அனைத்து நிகழ்வுகளையும் எங்கள் இயக்குநர் அவர்களிடம்

தெரிவித்ததின் பேரில் அவருக்கும் லஞ்சம் பணம் கொடுக்க விருப்பமில்லாததால், லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்திற்கு சென்று என்னை புகார் கொடுக்கும் படி கூறியதாக Deputy general manager அவர்கள் என்னிடம் கூறினார். பின்னர் எங்களது நிறுவன வங்கி கணக்கில் இருந்து Accountant திரு. மோகன் ராஜ் அவர்கள் மூலமாக என்னிடம் ரூ.5,00,000/- கொடுத்து, லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் அளிக்க எனக்கு Deputy general manager திரு.ராஜேஷ் அவர்கள் அளித்த உத்தரவு படி நான் 21.10.2026 -ம் தேதியான இன்று லஞ்ச ஒழிப்பு துறை ஆய்வாளர், சென்னை நகரபிரிவு -I அவர்களை சந்தித்து புகார் அளிக்கிறேன். மேலும் வணிக வளாக கட்டிட Transform மாற்றுவதற்கு ரூ.5,00,000/- லஞ்சமாக கேட்ட கிண்டி மின்சார அலுவலகத்தில் பணிபுரியும் போர்மேன் திரு.ஜான் டே பிரிட்டோ மற்றும் உதவி பொறியாளர் திரு. சத்திய நாரயணன் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுகொள்கிறேன். இந்த புகார் மனுவுடன் என்னிடம் லஞ்ச பணம் கேட்டு வற்புறுத்திய போர்மேன் திரு.ஜான் டே பிரிட்டோ மற்றும் உதவி பொறியாளர் திரு.சத்திய நாரயணன் ஆகியோர்களும் நானும் எனது செல்போனில் பேசிய உரையாடல் (Voice Recorder) பதிவுகளை Sandisk -32 GB Pen drive -வினையும், Sai Pride Commercial Building மீட்டர் எண்ணான 09211017510 -ற்கு 5KW -லிருந்து 49 KW -ற்கு 44 KW add பண்ணுவதற்கு தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் லிமிடெட் (இணையதள மின் கட்டண முறை) Website-ல் செலுத்திய fees -ற்கான Receipt மற்றும் மற்றொரு மீட்டர் எண்ணான 09211017486 -ற்கு 38 KW -யிலிருந்து 49 KW -ற்கு 11 KW add பண்ண முயற்சித்த போது, Disconnect ஆகி, Application Process பண்ண முடியாததற்கான receipt -யும் இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd/- xx (G.சசிகுமார்) 21.10.2026

Sir, I received the above complaint on 21.10.2026 at 08.00 hrs. at my office and had discreet verification over the antecedents of the accused and bonafide of the complainant and after getting concurrence from the higher officials, I registered an FIR in Vigilance and Anti-Corruption Chennai City-I Cr.No.10/2026/AC/CC-I u/s 7 of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on this day 21.10.2026 at 08.30 hrs and taken up for investigation. Sd/- (P.I.JOSLINE MARY) INSPR OF POLICE, V&AC CC-I, Chennai-16.